9722

...ாகிய

யாழ்ப்பாணம்

ஸ்ரீ சேனாதிராயமுதலியார்

இயற்றிய

நல்லைவெண்பா.

அவர் மாணாக்கரிலொருவரும்

ஸெ. ஊர்

அருளம்பலமுதலியார்

புத்திரருமாகிய

அம்பலவாணபண்டிதராற்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE SCOTTISH PRESS,

BY GRAVES, COOKSON AND CO.,

TOPHAM HOUSE,

1878.

ஶிவமயம்.

வித்வசிரோமணியாகிய

யாழ்ப்பாணம்

ஸ்ரீ சேனாதிராயமுதலியார்

இயற்றிய

நல்லைவெண்பா.

அவர் மாணாக்கரிலொருவரும்

ஷை ஊர்

அருளம்பலமுதலியார்

புத்திரருமாகிய

அம்பலவாணபண்டிதரால்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE SCOTTISH PRESS,

BY GRAVES, COOKSON AND CO.,

POPHAM HOUSE,

1878.

சாத்துக்கவிகள்.

நல்லூர் அப்புக்குட்டிக்குருக்கள் சொல்லியது.

வெண்பா.

சேனாதி ராயன் றிறம்புகழுஞ் செல்வமிகுஞ்
சேனாதி ராயன்றன் சீர்க்கவிதை-சேய்நாளு
முற்றே புலவ ருரைகவிக்கு நன்மணியாய்ப்
பெற்றே விளங்கப் பெறும்.

இருபாலை அமரசிங்கமுதலியார் சொல்லியது.

கலித்துறை.

பொற்கீர மாவினன் சேனாள் புலவன் புலவருட
னற்கீர னாதன் போற்றுநல் லூர்ப்புல வன்குழைகட்
கிற்கீர வாரி யமுதுசெய் நூறுவெண் பாவிசைத்தான்
சொற்கீத நற்றமிழ்ச் சேனாதி ராய னெனுந்துய்யனே

தெல்லிப்பழை, சி. வை. தாமோதரம்பிள்ளை சொல்லியது.

விருத்தம்.

உவர்நீருண் டிடுமேக மொண்சுவைநீ ருதவியென வோத முண்ட
தவநீடு முனிவரன்செந் தமிழ்மதுரக் கடலளித்தான் றமிழாக் துய்ய
பவநீர்முற் றினிதருந்திப் பாவலர்க்கோர் நல்லூர்வெண் பாவாந் திவ்ய
நவநீத வமிழ்தினைச்சே னாதிரா யன்றிரட்டி நல்கினனால்,

உ

கணபதி துணை.

நல்லூர் வெண்பா.

கந்தவேள் வேண்முருகன் காங்கேயன் காதலித்து
வந்தநல்லூர் வெண்பா வகுப்பதற்குச்-சந்த
வனகவள வாரணமுன் ஞங்குடிலை மேவுங்
கனகவள வாரணமே காப்பு.

பூமாது பூவினுளப் பொன்மலரென் றெண்ணிநித
நாமா துடன்வாழு நல்லூரே-தேமாது
பாலனய னத்தன் பரிந்தறியா நின்றவரன்
பால*னய னத்தன் பதி........................ (க)

பொன்னுலக மன்ன புகழீழ மண்டலஞ்சேர்
நன்னகர நாகரிக நல்லூரே-முன்னிலகுங்
காற்படையான் பூத கணப்படையா னென்னையினி
மேற்படையான் மேவும் பதி........................ (உ)

சீர்விளங்கு மெப்பதிக்குஞ் செப்புகின்ற சொற்பெயரே
யூர்விளங்கு நாமமா நல்லூரே-யூர்விளங்கு
நன்கதிரை நாகத்தா னண்ணலரென் றஞ்சுவிக்குந்
தென்கதிரை நாகத்தான் சேர்வு........................ (ங)

* யமகநோக்கிய நகரத்திரிவு

போற்றுமடி யார்பிறவிப் புன்மையிரு ணீக்குதலா
னூற்றிசையும் வந்திறைஞ்சு நல்லூரே-யேற்ற
மருவல்ரை நேர்முடித்தான் வானவர்க்காய் நீப
மருவலரை நேர்முடித்தான் வாழ்வு..............(ச)

ஆம்பன் முகவோடை யார்ந்தங் குசந்தழுவி
யோம்பொருளா மைங்கரனேர் நல்லூரே-பாம்பஞ்ச
வாடு மயிலா னமருலகு வாழவம
ராடு மயிலா னகம்..............................(ரு)

கண்முளரி சங்கங் கவின்றுநா கம்பொருந்திப்
பெண்ணிடத்தன் போலும் பெருநல்லை-விண்ணிறமா
ரங்கத் திருந்தா ரமரழித்தா ரன்றுதமிழ்ச்
சங்கத் திருந்தார் தலம்..........................(சு)

பொன்னங் கலையார் விலோதனத்தான் மாதிரம்போய்த்
துன்னியசீ ராலுமைநேர் நூநல்லை-முன்னயனைத் [த்
தாரகங்க டாவினன் றுபரக்கட் பீலியைச்சூர்
போரகங்க டாவினன் பூ..........................(எ)

சசிதவள வானையுந் தாமனையென் றெய்த
விசைகடவுள் யானையன்ன நல்லை-நிசிசரர்கள்
பஞ்சா *யுதவகன்போற் பற்றியுண்க வென்றுதொட்ட
பஞ்சா யுதன்றன் பதி..............................(அ)

மாகுலவர் நம்பியுள மாதருடன் போற்றுதலாற்
கோகுலமா வல்லிநிகர் நல்லையே-கோகனக
வையற் கறைந்தா னருமறையி னுட்பொருளை
யையற் கறைந்தா னகம்..........................(கூ)

---

* ஆகவென்னும் வினையெச்சத்திரிவு

தும்பி மருப்பொசித்துச் சூழ்தவண மாலையினாற்
கம்பமருங் சையினனேர் நல்லையே-யும்பருறை
மாகனக வில்லார் மகனா ரடியருளக்
கோகனக வில்லார் குலம்........................(க0)

எண்ணம் புயத்தா விசையுங்கா யத்திரியார்
நண்ணுதலால் வேதனா நல்லையே-விண்ணுலவுங்
கங்கை வயிற்றுதித்தார் காதலுளார் போற்குறவர்
மங்கை வயிற்றுதித்தார் வைப்பு... ....(கக)

மெய்ப்புலவ ருள்ளூறலான் மேகமதி லூர்தலா
லொப்புவணை நாயகனா நல்லூரே-யப்புருவ
நஞ்சார் கணியானா னென்கா னவர்முன்பு
நஞ்சார் கணியானா னாடு........................(கஉ)

நத்தமூ ருங்கயத்தா னன்கிளிகொள் பாடலத்தாற்
சித்தசவேள் போலுந் திருநல்லை-முத்தின்
றிருத்தணிகை மாமலையுந் திண்கோட்டிற் காட்டுந்
திருத்தணிகை மாமலையான் சேர்வு..............(கங)

தாவார் கலியடக்கு மத்தவளந் தாங்குதலா
னாவார் தமிழ்முனிநேர் நல்லூரே-பூவாரும்
வாளங் கெடுத்தார்ப்பில் வந்த தனிமாயா
வாளங் கெடுத்தார் வழி...................... ....(கச)

பூமேல்வாழ்ந் திகை யுடையார் மனைப்பொலிவான்
மாமாது போல வளர்நல்லை-மாமணிகொ
ளாரூ னனத்தா னருட்குரவ னம்புயநே
ராரூ னனத்தா னகம்......................... (க௫)

சீரயனுல் வாயிசைந்து செய்ய கலைமருவிப்
`பாரதியை மானும் பதிநல்லை-நாரதன்செய்
யாகத் துவந்தா ரெதிர்வருமை யாரொருவி
யாகத்து வந்தா ரிடம்..........................(கசு)

காளகண்ட னன்கிசைமெய்ப் பூவையரி கண்ணுறலால்
வாள்வயங்கொ ளையனு மாநல்லை-நீளசுர
மாநாக மாளவைத்தார் வைவேல் பணித்தரியூர்
மாநாக மாளவைத்தார் வாழ்வு.......................(கஎ)

மற்குரிய தோளரசர் மாமுடியுங் கையகமும்
பொற்கவிகை காட்டும் புகழ்நல்லை-விற்குலவு
நாகங் கலந்தா ரெனநயந்தார் சேயிருவர்
பாகங் கலந்தார் பதி................................(கஅ)

பொன்னனையார் சிற்றிடையும் பூசுரர்கள்சொற்கிடையு
நன்னூல் கலைவிளங்கு நல்லூரே-முன்னினைநு
ரேற்றமருள் வீட்டினு னீர்வேலா னன்பருக்கே
யேற்றமருள் வீட்டினு னில்........................(கசு)

அரும்புமுலை யார்வாணி யைம்பா லுடனே
கரும்பிரசங் காட்டுங்கார் நல்லை-பெரும்போர்
மலையுருவ வேறெட்டார் வாழ்த்தினரை மாய
மலையுருவ வேறெட்டார் வாழ்வு....................(உ0)

கண்ணீல வாளிக் கரும்புருவ வில்லினல்லா
ரெண்ணுர் மதனே டிகனல்லை - விண்ணு
கருவா வினன்குடினை காலுலவும் பண்ணைத்
திருவா வினன்குடியான் சேர்வு.....................(உக)

கற்பகஞ்சேர் சாமக் கொடியார்பண் பாலீழ
நற்பதியான் மேலுலகா நல்லூரே-கற்பமுறுங்
காலங் கடந்தான் சமலா சனனெனவே
ஞாலங் கடந்தா னகர்.........................(உஉ)

தேங்குயிலா னண்ணிச் சிறுமியர்மா லைக்குயிலாற்
பூங்குயில்க ளேங்கும் பொழினல்லை - யோங்கும்
பரங்கிரியார் நள்ளாரிற் பாரு தருளும்
பரங்கிரியார் நள்ளார் பதி.........................(உங)

மொய்ம்மணிமேன் மாளிகையின் மின்னூர் முகமதியை
மெய்யிற் சகோரம் விழைநல்லை - துய்ய
திருவே ரகம்பதியான் சீரடியார் தம்மைக்
கருவே ரகம்பதியான் கால்.........................(உச)

சுவாசகமுந் நூலோர் சுருதியிசை தேர்ந்து
சுவாசகமுஞ் சொல்லுசீர் நல்லூர்-தவாத
பரதத்து வத்தன் பரையாள் குடையாம்
பரதத்து வத்தன் பதி.........................(உரு)

தேக்கும் புலவருடன் சீரசுத்தார் மார்பினருந்
தூக்கின் பொருள்பகருந் தூநல்லை - காக்குமவன்
கந்தப் பொகுட்டான் கரியவனுங் கைதொழுசீர்க்
கந்தப் பொகுட்டான் களம்.........................(உசு)

வேதவொலி வேள்வியொலி மிக்க விழாவொலியா
லோதவொலி நாணு முயர்நல்லை - காதரவின்
மாற்கிழவ னுகி வரைக்குறவர் முன்வள்ளி
பாற்கிழவ னுன் பதி.........................(உஎ)

அத்திபல வால்ரசு நாக மிசையுறலா
வித்தரணி போலு மெழினல்லை - தத்த
னனந்தனந்தி மெய்யிழைநூர்க் கன்றருள்வா னவ்வி
யனந்தனந்தி மெய்யா னகம்....................(உஅ)

வச்சிரனல் வில்லான் மகிழரம்பை யாரிசைவா
லச்சுந் தரிநே ரணிநல்லை - மெய்ச்சிவநூன்
மாமலை யத்தவற்கே வாய்மலர்ந்தான் மன்னுதுடி
நாமலை யத்தவனல் லூர்........................(உகூ)

கந்துகமுந் தானைவேற் காளையருங் கன்னியருங்
கந்துகமுந் திக்களிகூர் நல்லூரே - சந்திரமா
மாவைப் பிழர்தார் மகிழ்பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் மனை........................(௩0)

தூவிமயின் மீதாகச் சுந்தரநல் லூரிறைவன்
சேவலங்கை யான்பவனி சேர்ந்ததுதான்-தீவகம்போ
லக்குருகு முன்னு வவர்க்குருகு மாயிழையார்
கைக்குருகு கொள்ளவே காண்..................(௩க)

சந்தமணி சீர்பொருள்கள் சார்ந்தகர முன்னதாச்
செந்தமிழே போலுந் திருநல்லை - செந்தேனு
மாவுங் கனியுமென்றூர் வல்லிசெவ்வாய்த் தேனுக்கு
நாவுங் கனியுமென்றூர் நாடு.....................(௩உ)

பர்கனசொல் லார்நகையும் பன்னு சிவநூலு
மாகதியைக் காட்டு மணிநல்லை - நாகவுரி
போர்க்குமரன் சத்திதரப் போந்தசுரர் மாளவடும்
போர்க்குமரன் சத்திதரன் பூ.................. (௩௩)

கண்டைமா வேயன்றிக் கற்றவரு மற்றவருந்
தண்டம் பொருந்தாத் தனிநல்லை - விண்டுதொறு
மாடும் பதத்தினு னண்டர்களு நான்மறையுந்
தேடும் பதத்தினுன் சேர்வு......................(௩௪)

*நீல னிலவார னீள்கதிர்பொன் வெள்ளிபச்சை
சால்பவனத் தால்வான் றகுநல்லை - யால்வளருந்
தாமோ தரன்மருகன் றண்ணகையால் விண்ணமரர்
தாமோ தரன்மருகன் சார்பு......................(௩௫)

புலிசேர்ந் துவாக்கள் பொலியப் பிணுக்க
விலகுகள பத்தொடிசை நல்லூர் - புலவோர் [இப்
பொருந்தாரை வேலையிடைப் பொன்றுவிக்குஞ் சோ
பொருந்தாரை வேலான் புரம்.................. (௩௬)

சங்கமுடன் குமரைநற் செந்தாது தானுறவாற்
பிங்கலனூர் போலும் பெருநல்லை - பொங்கரியின்
மாது வசத்தினுன் மானிடனு மாகியோர்
மாது வசத்தினுன் வாழ்வு.......... .... (௩௭)

சிலம்புவலை யார்பதம்போற் செவ்விப் பறம்புஞ்
சிலம்புபுனை செய்யதிரு நல்லூர் - வலஞ்சேர்
சதகோடி யன்னுன்கைத் தாக்குமுக்க ணுன்பொன்
சதகோடி யன்னுன் றலம்......................(௩௮)

தாரா பதந்தழுவுந் தண்பூகத் தாறருணன்
றேர்மேற் புனைமணியாஞ் சீர்நல்லூர்-சீர்மேவுந்
தூக்குக் குடத்தான் சுதனுந் தொழுந்தோகைக்
கூக்குக் குடத்தான் குலம்.................. (௩௯)

---

* சப்தரூப சிலேஷை.

ஓங்கு வளைக்குழையா ரொண்கண்ணுஞ் செங்கரமுந்
தேங்குவளை காட்டுந் திருநல்லூர்-பூங்குறிஞ்சிக்
கார்த்திகையா ரும்பல் கனங்கிரியான் காயமுலாங்
கார்த்திகையா ரும்பல் களம்.................... (௪௦)

ஆசினிவே ணிப்பொலிவா லாரமணி கன்னிகையார்
தேசதனாற் காசிநகர் தென்னல்லை-வாசவன்மு
னண்டரண்ட ராயநிலை யட்டருளி னானகில
வண்டரண்ட ராய னகம்..................... (௪௧)

செல்வமலி நல்லூரே செஞ்சிலைக்கை வெஞ்சூரன்
றொல்வலியன் றன்மாயச் சூழ்வினாற்-பல்விதமாம்
புல்லுருவங் காட்டினா னென்பதெல்லாம் போக்கியோர்
நல்லுருவங் காட்டினா னூடு.................... (௪௨)

இரவலராய் வாய்மலர்வ தீர்ங்குவளை முன்னா
வரவலரே வாய்ந்தவெழி னல்லை-திரமா
முரவா குவையுய்த்தான் பின்னவனாற் றோதி
வரவா குவையுய்த்தான் வைப்பு............... (௪௩)

வாரணியுங் கொம்மையா ரோதிமன்ன ரம்புயம்போற்
றாரணியைத் தாங்குந் தனிநல்லை-நாரணிதன்
செங்கைக் குமாரன் சிறுகுடியில் வாழ்ந்தமா
னங்கைக்கு மார னகர்..................... (௪௪)

வண்டேறு கையார் மதனனையார் மார்பினிற்கோ
வண்டேறு காட்டு மணிநல்லை-வண்டேறு
செச்சையங் கோடலான் சிந்தையிலு முந்துகதிச்
செச்சையங் கோடலான் சேர்வு............... (௪௫)

பாலனத்தை நண்பாம் பசுங்கிளிகண் மாலெனவே
பாலனத்தை யாரும் பகர்நல்லை-யாலைக்
கழனிவரைக் கந்தநீர் காலருவி பாயும்
பழனிவரைக் கந்தன் பதி......................(சசு)

அம்பரத்தைத் தாவியருஞ் சூரனேர் சந்திசைவான்
மொய்ம்பினனு மொய்பொழில்சூழ் நல்லூரே-யும்பரி
கோக்குஞ் சரத்தான் குடியேறத் தானவரைக் [லே
கோக்குஞ் சரத்தான் குலம்.....................(சஎ)

நந்தா வனத்தருவி நன்மதுவா ருந்தேன்கள்
மந்தாரத் தேனளவு மாநல்லை-முந்தா
மடங்கலையம் பிற்செற்முன் மாறூர்ந்த வெய்ய
மடங்கலையம் பிற்செற்முன் வாழ்வு.......... ..(சஅ)

காவலர்கள் வேந்து கதித்துயர்ந்த மேற்குலத்தான்
மேவுங் கவுசிகனேர் மெய்ந்நல்லை-தூவரையிற்
காஞ்சிமணி மானிழலார் கன்னிவள்ளி சேர்காந்தன்
காஞ்சிமணி மானிழலான் காப்பு... ....(சகூ)

பண்ணை மடந்தையரும் பாணரும் பாய்பரியும்
பண்ணையிசை பண்பாரு நல்லூரே-யெண்ணரிய
மாமாய வீட்டினன் மாயவுரு வாஞ்சூர
மாமாய வீட்டினன் வாழ்வு......................(ரு0)

போதப் பொலிவுள்ளார் முத்தி நலம்பொருந்தி
யோதக் கடல்போ லுயர்நல்லை-பாதக்
கனகச் சிலம்பன் கலைப்புலவன் செவ்வே
ளனகச் சிலம்ப னகம்.........................(ருக)

ஓவர் புனையோ வியம்புதுக்க மேனிலையிற்
றேவரேம றென்றணையுஞ் சீர்நல்லை-பூவுலகங்
காப்பா னளிப்பானற் கஞ்ச னெனவனைத்துங்
காப்பா னளிப்பான் களம்.......,..............(ருஉ)

சங்கந் தரியாமா லாறு ளலர்தழீஇ
யங்கம்பொன் னுயு மனம்வெறுத்தா-ளெங்கும்
விரும்பவனி போற்றுநல்லை வேலர் மயின்மேல்
வரும்பவனி கண்டுவந்த மான்.................. (ருங)

பொங்கர்சூழ்ந் தங்கார் முகச்சிகரிப் பொற்பினுற்
றங்கமலை போலுந் தனிநல்லை-யங்குளத்திற்
கோட்டம் புரிந்தார் குறிக்கரியார் நன்குமர
கோட்டம் புரிந்தார் குலம்.....................(ருச)

என்னீலங் கட்கிடைந்த தென்னுமின்னுர் மொய்க்க
லங்கீல் மாங்கே யலர்நல்லை-பொன்னூர்த் [கையா
திருக்குமரி ஞாங்கரான் றெவ்வொடன்பர் நெஞ்சிற்
றிருக்குமரி ஞாங்கரான் சேர்வு..................(ருரு)

வாவிக் கயலுகளும் வர்ன்கவரிக் கன்றுடனே
வாவிக் கயலுகளு ம்நல்லை-தூவிப் [வை
பொருந்தோகை மேற்கொண்டான் பூம்புனத்தோர் பூ
பொருந்தோகை மேற்கொண்டான் பூ.......... (ருசு)

ஏழிசைநன் கந்திருவ மேந்திரதஞ் சேர்நலத்தாற்
சூழுங் கதிர்போலுந் தூநல்லை - யேழையர்தம்
பொய்க்கதிர்கா மத்தினுர் புந்தியுறுர் பைந்தட்ஞ்சூழ்
செய்க்கதிர்கா மத்தினுர் சேர்வு................. (ருஎ)

வன்ன வுவளகத்து மாழை தவளகத்து
மன்னம் வழங்கு மணிநல்லே - முன்னயனே
யுட்காந் தலையிட்டா ருச்சியினிற் செச்சையந்தா
ருட்காந் தலையிட்டா ரூர்.........................(ருஅ)

தண்டாளி னம்புயமுந் தார்வயவ ரம்புயமும்
வண்டா சனங்கொள்ளு மாநல்லே - தண்டாத
வேகத் தடுத்தான் விடுமிரத ஞாலநிலே
யாகத் தடுத்தா னகம்..........................(ருகூ)

கற்கடக வில்லார் கலேவளருங் காட்சியா
லற்கதிரை யொப்பாகு நல்லூரே - முற்கிரன்
சொற்கா மரத்தா னணிதூய மாலேயான்
பொற்கா மரத்தான் புரம்........................(சுo)

என்னுசை யம்பரமே லானே னினிநாண
மென்னுசை யம்பரமே யாதலான் - முன்னொருநாட்
டந்தார்வந் தாரார்நல் லூரார் தழைகடம்பந்
தந்தார்வந் தாரார் தனி........................(சுக)

நந்திக் கிளையா னயக்குங் குழக்கன்றுந்
தந்திக் கிளையாத் தனிநல்லே - வந்திக்கா
யன்று றுடையா தடைத்தார்சே யக்கரங்க
ணன்று றுடையா னகர்.........................(சுஉ)

வல்விலங்கே தன்பேர்ப் பொருள்பூண்ப வாய்மறந்துஞ்
சொல்விலங்கா நல்லோர்வாழ் தூநல்லே - கல்விலங்கல்
வேற்று னயினட்டான் மேலவரைத் தான்பதியா
மாற்று னயினட்டான் வைப்பு.....................(சுங)

செந்நெல்லும் வேள்வித் திறத்தினருங் கன்னலுமே
கன்னனிலே காட்டுங் கவினல்லை - மன்னுசிவ
னுண்மைகோ லாணிறுத்தா னெட்டிவருஞ் சூர்மாயத்
திண்மைகோ லாணிறுத்தான் சேர்வு..............(சுச)

வாழை நலியக்குதிக்கும் வன்கடுவன் மாமுகத்
தாழையிள நீருகைக்குந் தண்ணல்லை - நாளுங்
குடத்தியரை வேட்டான் கொடுத்தவிரு கொம்மைக்
குடத்தியரை வேட்டான் குலம்................(சுரு)

புண்டரிக னீள்போகி போற்றிப் பணிகுதலாற்
புண்டரிக மாபுரநேர் நல்லையே - மண்டமரி
லார்ப்பினடைத் தானவர்சே ரண்ட நெறிவாளிப்
போர்ப்பி னடைத்தான் புரம்.................:(சுசு)

பூசல் வளைக்கையார் பூங்குழலும் பொன்மலருங்
கேசரநன் காருங் கிளர்நல்லை - யாசினியிற்
செக்கரிந்து நேர்மலைந்தார் செல்வர் வடிவேலாற்
கொக்கரிந்து நேர்மலைந்தார் கோ...............(சுஎ)

வான்புலவர் போல்வேளை வாழ்த்தும் புலவோருந்
தானமுதங் கொள்ளத் தகுநல்லை-யூனு
ருடம்பிடிக்கைச் சீரா னுறுநரையஞ் சேலென்
றுடம்பிடிக்கைச் சீரா னுலகு..................(சுஅ)

கார ணிகையினண்ணிக் காவினன்மே னூடுறலால்
வாரணிமந் தாகினிநேர் மாநல்லை - நாரணன்றன்
மால்வளைசேர் கண்டன் மறமழித்தான் வான்வளரும்
பால்வளைசேர் கண்டன் பதி...................(சுகு)

வேலிகவா மன்னவரு மெய்ம்மை யணங்கினருங்
கோலி னிறைகுன்றா நல்லூரே - மாலுதவு
மாதங்க மாகமுற வந்தருள்வா யைந்துகையாய்
மாதங்க மாகவென்றான் வாழ்வு..................(எo)

கம்பை யிசையொலியாற் காமாரி மேலுறலா
னம்புகச்சி யொப்பாகு நல்லூரே - யம்பரகப்
பாலார்ந்த வாயன்கைப் பைந்தொடித னம்பொழியும்.
பாலார்ந்த வாயன் பதி.......................(எக)

சாரங் கனிமொழியார் கண்ணுதல்போற் றாழ்குழலுஞ்
சாரங்கங் காட்டுந் தனிநல்லே - கீரங்கொள்
வெள்ளத் துறையான் வியன்மருகன் மெய்யற்றா
ருள்ளத் துறையா னுலகு......................(எஉ)

வார்காட்டும் பொற்குடத்தார் வாய்நகைகை கொந்தள
கார்காட்டப் பீலிமகிழ் காநல்லே - வார்கோட்டுத் [றாங்
தானமுறக் காதினன் றானவவே தண்டமுட
னீனமுறக் காதின னில்......................(எங)

பூம்பா ளெங்கமுகின் றண்பாளை பொன்னிரத
வாம்பா டலக்குளையா மாநல்லே-தீம்பனச்சூர்
பட்டிகுடித் தேவனில பாடழிக்கும் வைவேலா
னெட்டிகுடித் தேவ னிடம்....................(எச)

மால்வளர்வா னெச்சிசூழ் வாரிமணிக் கோட்டத்தா
னுஞ்திணை யும்பொருந்து நல்லூரே - நாலாகுந்
தேன்சிலம்பு மட்டார் திருக்கடம்பர் சீருறைவாய்
வான்சிலம்பு மட்டார் வழி....................(எரு)

வாரிக்கு நேராலே மண்டொலிபோ யெண்டிசையும்
வாரிக்கு நேராய் வளர்நல்லை - பூரியினங்
கந்தருவ மேவினர் காதலர்மான் கன்னிமணங்
கந்தருவ மேவினர் காப்பு...................... ...(எசு)

வாதா யனமனையார் வாண்முகத்தால் வான்மதியை
வாதா யனஞ்சயங்கொண் மாநல்லை - பூதியமார்
கண்டங் கரியான் வலவனய னுய்யவே
கண்டங் கரியான்சேய் காப்பு.................... (எஎ)

கன்னிமணி வாழை கனங்குலையாற் காய்கதிரோ
னுன்னியுட னட்பா முயர்நல்லை - பன்னோ
ருருத்திரமா னத்துப்பா ரோங்கயிலார் காம
ருருத்திரமா னத்துப்பா ரூர்......................(எஅ)

எண்கோட் டகத்து மெழின்மலர்ப்பூங் கோட்டகத்துந்
தண்கோட் டலவன் றவழ்நல்லை - வெண்காட்டு
ளாடி முருகா ரடியவர்க்குக் காட்சிதரு
மாடி முருகா ரகம்..............................(எகூ)

தானமருண் மாவுந் தரணிபரும் வானவர்போற்
றானம் பொருந்துந் தனிநல்லை - தேன்வனத்தார்
மன்பர சுந்தரத்தார் வள்ளிசுர வேழஞ்சேர்
மன்பர சுந்தரத்தார் வாழ்வு.......................(அ0)

கீதவிசை யால்வெடிபோய் நீள்கிடங்கின் மீள்வாளை
சீதமுனி போலுந் திருநல்லை - யோதமர
ரிட்ட விலங்கறுத்தா னெல்லரியவ் வானவரை
யிட்ட விலங்கறுத்தா னில்......................(அக)

சுருதி யிசைவிதிசேர் வாணிமினார் சூழ்வாற்
பிரமபதம் போலும் பேர்நல்லை - யருளியமா
தாவ மலையகத்தான் றாரகத்தான் வேங்கடமாக்
தேவ மலையகத்தான் சேர்வு........................(௮௨)

பணிபணை நன் மாதவராற் பாரெண் பொறியான்
மணிவளர்வை குந்தநேர் நல்லூர் - திணியசுர
வன்பர்க் கருள்வா னிசைபுலர வான்விபுத
வன்பர்க் கருள்வா னகம்........................(௮௩)

பாரிடத்தர் போற்றும் பதியகமாம் பண்பினாற்
றாரவரை போலுந் தனிநல்லை - யாரணஞ்சேர்
புள்ளூர்முத் தையனலப் பொற்பா னரிபரவும்
புள்ளூர்முத் தையன் புரம்........................(௮௪)

சீரரச கேசரிமுன் னாகுந் திறலாண்மைப்
பாரரசர் போற்றும் பதிநல்லை - காரிகையார்
தாராதா ரக்களத்தன் றந்தமட வார்புனையுந்
தாராதா ரக்களத்தன் சார்பு........................(௮௫)

படைமடத்தை நீங்கினார் கற்றார்பன் னூலுங்
கொடைமடத்தர் வாழ்வுகூர் நல்லூர் - விடமடைத்த
கந்தரத்தர் செம்மலருட் காங்கேசர் வேலுகந்த
கந்தரத்தர் செம்மல் களம்........................(௮௬)

ஐயமினார் சிற்றிடையே யன்றி யெவரிடத்து
மையமெனார் வாழு மணிநல்லை - பையரவை
வாட்டுமொக ரத்தன் மகரவரை மாத்திரைசேர்
நீட்டுமொக ரத்த னிலம்........................(௮௭)

பொங்காழி மாலெதிரப் பூங்குழலார் பொன்னுடனே
சங்காழி தாங்குந் தனிநல்லை - வெங்காளி
நாடகமு ஞடினர் நந்தர்மா தைப்புனமே
ஞடகமு ஞடினர் நாடு......................(அஅ)

வாரிசமி னன்னுர் நகைநிலவான் மைந்தருள
வாரிசங்கள் விள்ளு மணிநல்லை - யூர்க
வனப்புரு வைப்பரித்தார் செச்சையர்மா வேட்
வனப்புரு வைப்பரித்தார் வாழ்வு..................(அகூ)

சாலகத்தார் மந்தாரஞ் சாலகத்தார் மெல்லியர்க்குச்
சாலகத்தா னல்குந் தனிநல்லை - மேலரண்மே
லுந்துஞ் சரவணத்தா னும்ப ருயமகவாய்
நந்துஞ் சரவணத்தா னூடு......................(கூo)

கட்டேற லாரறுகால் காவியுடன் கன்னியர்தங்
கட்டேற லாவயல்சூழ் காநல்லை - கட்கமொளி
வட்டங் கழுக்கடையார் நாயகவை வேலர்பொய்
யுட்டங் கழுக்கடையா ரூர்................ ......(கூக)

முத்திபதந் தங்களினேர் மூரலம்மத் தார்மயநீர்
முத்திபதந் தந்தருண்முத் தையனிட - முத்தம்
பலவலஞ்சூ ழில்லார் பவனம் பழனம்
பலவலஞ்சூழ் நல்லைப் பதி ....(கூஉ)

வில்லிரவி மேலோங்கும் பொன்கர்ப்பு வெண்கர்ப்பான்
வில்லிரவி போலும் வியனல்லை - நல்லிரவிற்
கானவரை யுற்ரு ரெனக்கவர்ந்த கன்னியுடன்
கானவரை யுற்ரூர் களம்.........................(கூந)

அகங்காரங் கோவாதி சேர்நிலையா னென்னு
மகங்காரந் தீர்த்தருளு மையன் - குகன்கோயில்
பூவுலகுங் கீழ்மேல் பொருந்துலகு நாலிரண்டா
மாவுலகும் வாழ்த்தியநல் லூர்........................(கஃச)

அன்ப ரகத்தளையு மாயர் சிறுருளையு
நன்களையு முத்தங் கொளுநல்லூர் - பொன்குல்வு
வத்திரங்க ளேந்தான் மகனசுரர் கொண்டவிய
வத்திரங்க ளேந்தான் வலம்........................(கஃரு)

பாரியரி சந்தனங்கொள் பண்பினரா லேற்பவரும்
பாரியரி சந்தனங்கொ ணல்லூரே - பாரி
வருஞ்சயந்த னத்தான் மகன்றருவி னீழல்
வருஞ்சயந்த னத்தான் வழி........................(கஃகூ)

சலமிலர்கோள் வஞ்சங் கரவு தவிர்ந்தார்
நலமியல்பார் வாழ்வுகூர் நல்லூர் - பொலியு
மிருவாலை பாகனைய தோளினிய சொல்லா
ரிருவாலை பாக னிடம்........................ (கஃள)

சீரியபொன் மின்னுகந்த மாதனமுள் ளார்செறிவா
னேருந் திருச்செந்தூர் நீணல்லை - யூருக்
கனவிலஞ்சே லென்றுருங் கட்சுந் தரிசேய்
கனவிலஞ்சே லென்றூர் களம்........................(கஃஅ)

தவருந் தனிமா தவரும் பதுமத்
தவருந் தவமகிழு நல்லூர் - தவருஞ்
சலதரமு மாகநின்றூர் தன்மையர்வை வேலார்
சலதரமு மாகநின்றூர் சார்பு........................(கஃகூ)

தன்மங் கல்மெனக்கொள் சால்பினர்மெய்ச் செல்வர்
நன்மங் கலஞ்சிறந்த நல்லூரே-பொன்மலியுஞ் [சேர்
தூம மதலையார் தன்னடியா ருய்யவருள்
சேம மதலையார் சேர்வு..........................(௧௦௦)

சைவம் பொலிக தமிழ்தழைக தாரரசர்
செவ்வியகோ லுய்கவளர் சீர்நல்லை-மெய்ம்முனிவர்
நன்கவியுங் கானவரே னற்சருவுங் கொள்வானென்
புன்கவியுங் கொள்வான் புரம்.

முற்றும்.

உ

கணபதிதுணை.

நீராவிப்பிள்ளையார் பேரில்

ஸ்ரீ சேஞுதிராயமுதலியார்

இயற்றிய

கலிவெண்பா.

காப்பு.

பொன்பூத்த நீராவிப் பூங்கோயில் வாழ்வுகந்த
மின்பூத்த வோர்கோட்டு வேழமே - நின்சீர்த்தி
வெண்கலியாற் போற்ற விஞயகனே நல்லருள்செ
யெண்கலிதீர்த் தென்னுள்ளே நின்று.

பூவம் புயன்சீர்ப் புயங்கத்தான் காணருநாற்
பூவம் புயன்சீர்ப் புயங்கத்தான் - பூவம்பார்

மாதங்க மாதரித்தான் மைந்தனென வாழ்வதனை
மாதங்க மாதரித்த மைந்தனே - மாதங்க

மெய்க்கோட் டகவரையு மேன்மைபெறப் பாரதமோர்
மெய்க்கோட் டகவரையும் வித்தகா - மெய்க்கோட்டங்

கொண்டுள்ளங் கோடாது கும்பிடுநல் லன்பர்குறை
கொண்டுள்ளங் கோடாக் குணவனே - கொண்டனைய

வென்றூர்க்குங் கும்போத ராதியர்நா தாப்ணியா
வென்றூர்க்குங் கும்போத ராதியே - யென்றூர்க்குங்

கற்பகஞ்சேர் வல்லி கனகநிலங் காமருசீர்க்
கற்பகஞ்சேர் வல்லி கனகநிலங் - கற்பனைசெய்

மாதாதா மந்திர மதலையா மன்னுலக
மாதாதா மந்திர மதலையா - மாதாதர்

அஞ்சலா ரும்பணிசெய் யாளாக வண்ணல்பணி
அஞ்சலா ரும்பணிசெய் யாளாக - வஞ்சலெனுங் [கைச்

செங்கையார் செம்மலே செம்மலைகோட் டுஞ்செழுங்
செங்கையார் செம்மலே செம்மலரிற் - செங்கையைநேர்

தேவல் லவையுள்ளார் சித்தனே நீயாகுந்
தேவல் லவையுள்ளார் சித்தனே - தேவர்க்காப்

பொல்லா விபமுகத்துப் புங்கவசு ரற்செகுத்த
பொல்லா விபமுகத்துப் புங்கவனே - பொல்லாத

பாசாங் குசம்பா டணைகரவு பாறவருள்
பாசாங் குசம்பா டணைகரத்தாய் - பாசாங்கக்

கோவிந்த னூரரவ வச்சறுத்தாய் கோலவிடக்
கோவிந்த னூரரவ வச்சறுத்தாய் - கோவிந்தங்

தாழ்த்தவருங் கையாறு சாய்த்தா யடியர்தலை
தாழ்த்தவருங் கையாறு சாய்த்தானே - தாழைநறுங்

காய்தகர்க்கு மேலோர்க்கு முன்னோனே காதமரிற்
காய்தகர்க்கு மேலோர்க்கு முன்னோனே - காயவஞ்ச

அஞ்சுதலை யம்மானை யம்மா னெனுமிணையாம்
அஞ்சுதலை யம்மானை யாட்டிகந்தோ - யஞ்சுகச்சொற்

போதகமா நேரும் புதல்விசெவ்வேள் கூடமதப்
போதகமா நேரும் புனிதனே - போதநெறி [வாழ்

மெய்கண்ட தேவனெனு மெய்ப்பொருளை வெண்ணெயில்
மெய்கண்ட தேவன் விளங்கவைத்தாய்- மெய்கொண்டு

மாகவள மார்வயின வண்ணைநகர் வாழ்வுகந்த
மாகவள மார்வயின வண்ணையத்தா - மாக

மலைக்கு மரிக்கு மருகா சுவண்ண
மலைக்கு மரிக்கு மருகா - மலைக்கின்ற

ஏரம்பா வோர்கொம்பா வேகம்பா சீர்நம்பா
ஏரம்பா வோர்கொம்பா வேகம்பா - வேரம்பார்

நீராவித் தான நிலையமகிழ்ந் தாய்நிலமா
நீராவித் தான நிலையனே - நீராவி

முப்பாலை யப்பாலின் முற்றியது மற்றையதை
முப்பாலை யப்பாலின் முற்றுவிப்பாய் - முப்பாலாங்

காலங் கிரியை யருள்கருத்தா நீயேயாங்
காலங் கிரியை யருள்கருத்தா - காலன்

உருக்கொண் டிடவந் துறுநாளென் முன்னீ
உருக்கொண்டு வாரா யுவந்து

முற்றும்